## திரு.வி.க. நகர் தொகுதி – கன்னிகாபுரம் பகுதியில் ரூ.59 கோடியில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்!

# ‘வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்’ கீழ் - ரூ.475 கோடியில் 5 திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

**சென்னை, பிப். 1-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) ‘வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்’ கீழ், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் நடைபெற்று வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம், கன்னிகாபுரம் விளையாட்டு மைதானம், கணேசபுரம் மேம்பாலம், ஸ்டான்லி மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புகள், தண்டையார்பேட்டை பேருந்து நிலையம் என 474 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 திட்டப் பணிகளின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

மேலும், கன்னிகாபுரம் பகுதியில் 59 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தனி கட்டடங்கள் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோக மேம்பாட்டுப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

### வடசென்னை வளர்ச்சித் திட்டம்

முதலமைச்சர் அவர்கள், சென்னை மாநகராட்சி மேயராகப் பதவி வகித்த போது வடசென்னை வளர்ச்சி திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு பணிகளை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. வடசென்னை மக்களின் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவு திட்டமான வடசென்னை வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்திடும் வகையில்,

2023-24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், “சென்னை மாநகரில் சமச்சீர் வளர்ச்சியை உறுதி செய்ய “வடசென்னை வளர்ச்சித் திட்டம்” என்ற திட்டத்தை 1,000 கோடி ரூபாய் செலவில் அடுத்த மூன்று ஆண்டுகளில் அரசு செயல்படுத்தும் என்றும், இத்திட்டத்தில், கட்டமைப்பு பற்றாக்குறைகளையும், வளர்ச்சிக் குறியீடுகளின் குறைபாடுகளையும் கண்டறிந்து, அவற்றைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, “வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்” கீழ், மாதிரி பள்ளிகளை மேம்படுத்துதல், ஏற்கத்தக்க விலையில் வீடுகள் கட்டுதல், புதிய பேருந்து முனையங்கள் மற்றும் பணிமனைகளை தரம் உயர்த்துதல் மற்றும் கட்டுமானம், முக்கிய பகுதிகளில் துணை மின் நிலையங்களை நிறுவுதல், போதைப்பொருள் மீட்பு மறுவாழ்வு மையம் மற்றும் திறன் மேம்பாட்டு மையத்தை அமைத்தல், சிசிடிவி கேமராக்களை பொருத்துவதன் வாயிலாக பாதுகாப்பினை மேம்படுத்துதல், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக உயர்தர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டுமானப் பணி, குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்றல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள், பொது பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், கடற்கரைகள், வணிக சந்தைகள், சலவையகம், குருதி சுத்திகரிப்பு மையங்கள் போன்ற உட்கட்டமைப்பு கட்டுமானங்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முதலமைச்சர் அவர்கள் கடந்த 14.03.2024 அன்று சென்னை, தங்கச் சாலையில் 2,097 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 87 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். இத்திட்டமானது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, எரிசக்தித் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் விரிவடைந்து தற்போது 6,309 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 252 திட்டங்களாக அதிகரித்துள்ளது.

இதில் 29 திட்டப் பணிகள் முடிவடைந்து, 166 திட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. எஞ்சிய பணிகள் விரைந்து தொடங்கப்படும். இப்பணிகள் அனைத்தும் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நடைபெற்று வரும் 5 திட்டப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, ஒரு புதிய திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

அதன் விவரங்கள்:

### கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம்

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் சென்னை, வில்லிவாக்கம், பாடி மேம்பாலத்தின்கீழ், சிவசக்தி காலனியில் சுமார் 3.93 ஏக்கர் பரப்பளவில் 53.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,25,402 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் கடைகள், வாகன நிறுத்துமிடம், உணவு விடுதி வளாகம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள சர்வதேச தரத்திலான கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின் கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### கன்னிகாபுரம் பகுதியில் குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம்

அதனைத் தொடர்ந்து, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில், திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கன்னிகாபுரம் பகுதியில் 59 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தனி கட்டடங்கள் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புகளுக்கு குடிநீர் குழாய் மூலம் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். இக்குடிநீர் விநியோகம் மூலம் சுமார் 3500 குடியிருப்புகளைச் சேர்ந்த 80,000 மக்கள் பயன்பெறுவார்கள்.

### கன்னிகாபுரம் விளையாட்டு மைதானம்

பின்னர், திரு.வி.க.நகர், கன்னிகாபுரத்தில் 12.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3.75 ஏக்கர் பரப்பளவில் 20,315 சதுர அடியில் தரைதளம் மற்றும் 2 தளங்களாக கட்டப்பட்டு வரும் விளையாட்டு மைதானத்தின் கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த விளையாட்டு மைதானமானது, கால்பந்து மைதானம், பார்வையாளர்களுக்கான காட்சிக்கூடம், 2 மட்டைப்பந்து பயிற்சி வலைகள், சிலம்பம் மற்றும் கபடி பயிற்சி மைதானம், பூப்பந்து அரங்கம், பெண்கள் மற்றும் ஆண்களுக்கான உடற்பயிற்சி கூடங்கள், குத்துச்சண்டை வளையம், குழந்தைகள் விளையாடும் இடம், வயதானவர்களுக்கு வெளிப்புற உடற்பயிற்சிக்கூடம், நடைபாதை, வாகன நிறுத்துமிடம், கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப் படவுள்ளது.

### கணேசபுரம் மேம்பாலம்

திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வியாசர்பாடி ஜீவா இரயில் நிலையம் அருகில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், 678 மீட்டர் நீளம் மற்றும் 15.20 மீட்டர் அகலத்துடன், 226 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கணேசபுரம் மேம்பாலத்தின் கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### ஸ்டான்லி மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புகள்

தொடர்ந்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில் ஸ்டான்லி மருத்துவமனை சாலையில், 3,26,612 சதுர அடி கட்டடப் பரப்பளவில், வாகன நிறுத்தும் தளம் மற்றும் 9 தளங்களுடன் 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு தொகுதிகளாக கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இப்புதிய குடியிருப்புகளில் 853 இருசக்கர வாகன நிறுத்துமிடம், 8 மின்தூக்கிகள், 20 தண்ணீர் தொட்டிகள், சூரியசக்தி நீர் சூடேற்றிகள், 20,412 சதுர அடி பரப்பளவில் திறந்த வெளி இயற்கைப் பகுதி போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

### தண்டையார்பேட்டை பேருந்து நிலையம்

பின்னர், தண்டையார்பேட்டையில், 1.86 ஏக்கர் பரப்பளவில், அடித்தளம், தரைதளம் மற்றும் இரண்டு தளங்களுடன் 21.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தண்டையார்பேட்டை பேருந்து நிலையத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இப்பேருந்து நிலையத்தின் அடித்தளத்தில் 157 இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் 23 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடங்கள், தரை தளத்தில் 15 பேருந்துகள் நிறுத்துமிடம், 4 கடைகள், 2 மின்தூக்கிகள், காத்திருப்பு இடம், தாய்மார்கள் பாலூட்டும் அறை, ஏ.டி.எம். வசதி, முதல் தளத்தில் மேலாளர் மற்றும் பணியாளர் அறைகள், இரண்டாம் தளத்தில் பாதுகாப்பு பெட்டக அறை, தங்குமிடம் போன்ற பல்வேறு வசதிகளுடன் தண்டயார்பேட்டை பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆய்வின்போது, வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் அனைத்தும் காலதாமதமின்றி உரிய காலத்திற்குள், தரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றியழகன், ஆர். மூர்த்தி, ஆர்.டி.சேகர், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல் இயக்குநர் செ. சரவணன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர்கள் கே.ஜே.பிரவீன் குமார், வி.சிவகிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்களுக்கு நினைவரங்கம்!

## பல தலைமுறைகளையும் கடந்து உங்கள் புகழ் பாடும்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு – ஏ.கோவிந்தசாமியின் புதல்வர் ஏ.ஜி.அன்பழகன் நெகிழ்ச்சிக் கடிதம்!

**சென்னை, பிப். 1-**

**“முன்னாள் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கு தாங்கள் நினைவரங்கம் அமைத்திருப்பது பல தலைமுறைகளையும் கடந்து உங்கள் புகழ் பாடிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஏ.கோவிந்தசாமி அவர்களின் இரண்டாவது மகன் ஏ.ஜி.அன்பழகன் நெகிழ்ச்சிக் கடிதம் எழுதியுள்ளார்.**

*இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அவர் எழுதிய கடிதம் வருமாறு:-*

*என் தந்தை ஏ. கோவிந்தசாமி அவர்கள் மறைவுக்கு பின்னால் எங்களது குடும்பம் செய்வதறியாமல் தத்தளித்து நின்றது. அந்த நேரத்தில் முத்தமிழறிஞர் கழக தலைவர் கலைஞர் அவர்கள் தாயுள்ளத்தோடு எங்கள் குடும்பத்திற்க்கு நல நிதியாக ரூபாய் 1லட்சம் 1969ல் நிதிஅளித்து, சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைத்து எங்கள் தாயாரை அரசியலிலும் தொடர வைத்து மறுவாழ்வு அளித்ததை பயனாளிகளில் ஒருவனாக நன்றி உணர்வோடு குறிப்பிடுகிறேன்.*

*முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் எங்கள் தந்தையின் மீது வைத்திருந்த அளப்பரிய அன்பாலும், தந்தையின் அயராத உழைப்பிற்காகவும் ஒரு தலைவராகவும், தாயுள்ளத்தோடும் செய்தார்கள்.*



*இது அகில இந்தியாவில் மட்டுமல்ல; அகில உலக வரலாற்றிலேயே எந்தக் கட்சித் தலைவரும் செய்யாத செயற்கரிய செயல் என்று கூறினால் அது மிகையாகாது.*

*அண்ணா, நீங்கள் என் தந்தை ஏ.ஜி அவர்களுக்கு நினைவரங்கம் அமைக்கபடும் என அறிவித்து அதை மிக அருமையாக வடிவமைத்து ஒரு சரித்திர நினைவரங்கத்தை உருவாக்கி ஏ.ஜி அவர்கள் 1952 ல் இருந்து அவர் மறைந்த 1969 வரை அவர் ஆற்றிய மக்கள் பணி, பொது பணியில் அவர் ஆற்றிய அயராத உழைப்பையும் தற்போது உள்ள தலைமுறை மட்டுமல்லாமல் வருங்கால தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையிலும் என் தந்தையாரின் புகழ் என்றும் நிலைத்து நிற்கும் வகையிலும் ஒரு சரித்திர சான்றாகவும் அமைத்துள்ளீர்கள்.*

*இது தங்களுடைய அறிவாற்றலையும், தொலைநோக்குப் பார்வையையும் காட்டுகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “கொள்கை குணக்குன்றம்” என பாராட்டப்பட்ட ஒரு எளிய தலைவருக்கு இந்த நினைவரங்கம் பல தலைமுறைகளையும் தாண்டி உங்கள் புகழ் பாடிக்கொண்டிருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.*

*அண்ணா, நான் 1972 முதல் 1976 வரை மாணவர் தி.மு.க சென்னை மாவட்ட இணை அமைப்பாளராக பணியாற்றியுள்ளேன். கழக பணியில் சிறை சென்றுள்ளேன். எனக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து கழகம், முத்தமிழறிஞர் கலைஞர், அவர்களின் பின்னால் உங்கள் தலைமையிலும், வழியிலும் கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் தலைமையிலும் வழியிலும் நின்று பணியாற்றுவேன், என் குடும்பமும் பணியாற்றும் என்பதனை என் தந்தை திரு ஏ. கோவிந்தசாமி மீது ஆணையிட்டு உறுதி அளிக்கிறேன்.*

*இவ்வாறு ஏ.ஜி.அன்பழகன் தமது கடிதத்தில் கூறியுள்ளார்.*

---

<u>தி.மு.க.வுக்கு</u>

## ‘அன்பகம்’ வாங்கிக் கொடுத்தது எஸ்.எஸ்.ஆரா?

நடிகை விஜயகுமாரியின் பேட்டி ஒன்று 05.02.2025 தேதியிட்ட ஆனந்த விகடன் ஏட்டில் வெளியாகி இருக்கிறது. அதில் அவர் ஓர் இடத்தில், “அண்ணாவின் 50-ஆவது பிறந்த நாளுக்கு 50 சவரன் தங்கக் காசு கொடுத்தார் என் கணவர். இப்போ இருக்கிற ‘அன்பகம்’ இடத்தைக் கணவர்தான் வாங்கிக் கொடுத்தார். இந்தியாவிலேயே நடிகரா இருந்து முதல் சட்டமன்ற உறுப்பினர் ஆனவர் என் கணவர்” என்று பேட்டி அளித்து இருக்கிறார். இதில் மூன்று விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளன.

அவற்றில் இரண்டு சரியானவை. அன்பகத்தை எஸ்.எஸ்.ஆர். வாங்கிக் கொடுத்தார் என்று சொல்வது சரியானது இல்லை. **இடம் – கட்டடம் என்று இரண்டையும் கழக நிதியிலிருந்து கலைஞர் வாங்கினார். அவர் கழகப் பொருளாளராக அப்போது இருந்தார்.**

1964-இல் இந்தக் கட்டடம் வாங்கப்பட்டது. இக்கட்டடத்தை அண்ணா திறந்து வைத்தார். அதில் அண்ணாவோடு கலைஞர், கே.ஏ. மதியழகன், எஸ்.எஸ்.இராஜேந்திரன் கலந்து கொண்டனர். அது ஒளிப்படம் எடுக்கப்பட்டு இருக்கிறது.

அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு வெவ்வெறு விதமான செய்திக் குறிப்புகளை வெளியிடுகின்றனர். அதுபோல நடிகை விஜயகுமாரியும் தவறான தகவலைத் தருகிறார்.

**– க.திருநாவுக்கரசு**



மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் செக்கானூரணியில் புதிய பேருந்து நிலையம் கட்டுமானப் பணியை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மற்றும் அதிகாரிகள், கழகத்தினர், பொதுமக்கள் உள்ளனர்.



நெல்லை டவுன் உழவர் சந்தை பகுதியில் செயல்பட்டு வரும் 307,308 ஆரம்ப சுகாதார நிலைய அங்கன்வாடியை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஆகியோர் ஆய்வு செய்தனர். அப்போது அங்கன்வாடி பணியாளர்கள் வைத்த கோரிக்கைகளை கழக அரசின் மூலம் உடனடியாக நிறைவேற்றி தருவதாக கூறினர். நிகழ்வில் துணைச் செயலாளர் அப்துல் கையும், மாவட்டப் பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ் மற்றும் காஜாமைதீன், செந்தில், சிவா, முத்து, பெப்சி சரவணன், நவநீதன், நச்சினார் இனியன், ராஜேஸ்வரி, ராமச்சந்திரன், கணேச பெருமாள், பேச்சாளர் ரவி, மணிகண்டன், மாரிமுத்து, ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.